Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 12

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை - 01 14 - 04 - 2003 திங்கட்கிழமை ஓசை 55

வவுனியா நகரில்
வசந்தம் வீசும்
புடைவை உலகில்
உங்களின் நட்புக்கு.
சாந்தா ரெக்ஸ்
பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879

# பலமான சக்திகளை எதிர்கொண்டு தேசியத்தலைவர் போராட்டத்தை உயர்நிலைக்குக் கொண்டுவந்தார்

## இசை, நடன, நாடக விழாவில் பாலகுமாரன்

**தமிழர்களின் மென்முறைப் போராட்டத்திற்குத் தடை விழுந்தபோது அதனையும் மீறி தமிழீழ தேசியத் தலைவர் இளம் வயதில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து பலமான சக்திகளை எதிர்கொண்டு இன்று தாயக விடுதலைப் போராட்டத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார் என தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன், திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலை பண்பாட்டுக்கழகத்தின் இசை, நடன, நாடக விழா-2003 மானுடத்தின் தமிழ்கூடல் இரண்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.**

திருகோணமலை மண் சிங்கள பேரினவாதத்தால் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற மண். கடந்த காலங்களிலே தமிழர்கள் பல தியாகங்களையும், சாதனைகளையும் புரிந்த மண். இன்று இம் மண் சிதைந்து கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாங்கள் மென்முறை வழியிலேயும் தந்தை செல்வாவின் வழியிலேயும் போராடிய போது பெரிய தடை முன்னால் விழுந்தது. தடைகளை மீறி எமது போராட்டம் வளர்ச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள் விளம்பரதாரர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களுக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

## யாழ்.இல் புத்தாண்டு நிகழ்விற்கான இராணுவத்தினர் விடுத்த அழைப்பு பொது அமைப்புக்களால் நிராகரிப்பு

முகமாலைச் சோதனைச்சாவடியில் சிறிலங்காப் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் சிறிலங்காப் படையினரின் 524 ஆவது படைப்பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பெறவுள்ள புத்தாண்டு நிகழ்விற்காக யாழ்ப்பாணத்திலுள்ள பொது அமைப்புகளுக்குப் படையினர் அழைப்பு விடுத்த போதும் பொது அமைப்புக்கள் அதனை நிராகரித்துள்ளன. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மாணவர் அமைப்பு நடாத்திய விளையாட்டு நிகழ்வுகளில் பொது அமைப்புக்கள் கலந்துகொள்ள யாழ். மாவட்டத்திலுள்ள சிறிலங்காப் படையினர் தடைவிதித்திருந்தனர்.

## வாஷிங்டன் கூட்டத்திற்கு கனடா அமைச்சர் ஒருவரை அனுப்புகிறது

வாஷிங்டனில் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தில் கனடாவில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அமைச்சர் கலந்து கொள்ளவுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதில் இலங்கை இது வரை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து, கனடா பெரிதும் பாராட்டுவதாக அவர் கூறியுள்ளார். இலங்கைக்கான புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் எவ்வாறு உதவ முடியும் என்பது சம்பந்தமாக கருத்துக்களை பரிமாற இன்றைய கூட்டம் வழிவகுக்குமென கனேடிய அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கனடா கடந்த வருடம் ஒரு கோடி 23 இலட்சம் டொலர்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக்.ராணுவ அதிகாரிகள் கொழும்பிற்கு விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தானில் உயர் இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் கொழும்புக்கு வந்துள்ளார்கள்.

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக் கல்லூரியைச் சேர்ந்த 14 இராணுவ அதிகாரிகள் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். இக்குழுவினரை பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ மற்றும் முப்படைத்தளபதிகள் ஆகியோர் சந்தித்துள்ளனர். மேஜர் ஜெனரல் முகமத் சிந்நிக் தலைமையிலான இக் குழுவில் இரண்டு பிரிகேடியர்களும், நான்கு லெப்டினட் கேணல்களும் மற்றும் கடற்படை விமானப்படை

(12ஆம் பக்கம் பார்க்க)

## 500 இலங்கையர் தஞ்சம்

குவைத்தின் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ள சுமார் 500 இலங்கையர்கள் கட்டம் கட்டமாகத் திருப்பி அழைத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு திரும்பவுள்ள முதல் தொகுதியில் 62 பேர் இன்று கட்டுநாயக்கா வரவுள்ளதாகவும் ஏனையவர்களும் விரைவில் அழைத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## நம்பியாரின் 2-வது அறிக்கை 25ஆம் திகதி கையளிக்கப்படும்

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சதீஸ் நம்பியாரின் இரண்டாவது அறிக்கை வரும் 25ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்ந்து வரும் இந்தியாவின் முன்னாள் படைத் தளபதி லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார் 25ஆம் திகதி மீண்டும் சிறிலங்காவுக்கு வரவுள்ளார்.

அன்றைய தினம் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான தனது அறிக்கையை அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் சமர்ப்பிக்க இருக்கின்றார். 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஏழாம் கட்டப் பேச்சுவார்த்தையில் இந்த அறிக்கை குறித்து ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சதாம் ஹுசைனின் சொந்த ஊர் அமெரிக்கப் படைகளால் முற்றுகை!

சதாம் ஹுசைனின் சொந்த இடமான திக்ரித் நகருக்குள் அமெரிக்கப் படையினர் புகுந்துள்ளதுடன் அந்நகரையும் முற்றுகையிட்டுள்ளதாக அமெரிக்க ராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அந்நகருக்குள் தமது படையினர் எதிர்ப்புக்களைச் சந்திக்கவில்லை எனவும் மாறாக அங்குள்ள பொதுமக்களிடம் இருந்து அவர்களுக்கு உதவிகள் தான் கிடைக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அங்கு சதாமுக்கு ஆதரவான படைகள் தங்கியிருந்து கடும் எதிர்ப்புகளை வழங்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அது நடக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்கப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்து அங்கேயே இருக்கப்போகின்றன என்ற எண்ணத்தில் மத்திய கிழக்கின் பல பகுதிகளில் இருந்து தீவிரமான அரபு போராளிகள் அமெரிக்கப் படையினர் மீது கெரில்லாப் போர் தாக்குதலை தொடர்வதற்கு ஈராக்கிற்குள் வந்து குவிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களுக்கு தஞ்சம் வழங்கக்கூடாது என்று

(12ஆம் பக்கம் பார்க்க)



## வட-கிழக்கு தேவைகள் குறித்த ஆவணம் அரசு வெளியிட்டது

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தேவைகள் குறித்த விபரம் மக்களின் பார்வைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது. இது குறித்த அறிக்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஆவணத்தைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் எனத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. [சா/த] பெறுபேறுகள் சில பாடசாலைகளுக்கு வரவில்லை

(அலுவலக செய்தியாளர்)

கடந்தவருடம் நடைபெற்ற கா.பொ.த.சாதாரண பரீட்சை முடிவுகள் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் சிலவற்றுக்கு இன்னமும் வந்துசேரவில்லை என தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் வெளியாகிய மேற்படி பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த காலங்களைப் போலன்றி இம்முறை தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதன் காரணத்தினாலேயே இத் தகைய நிலைக்குத் நாம் தள்ளப்பட்டுள்ளதாக பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பரீட்சை முடிவுகள் கிளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### உயர்கல்வி நிறுவனம் வட்டக்கச்சி

A/L 2004, 2005 இற்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பம் 14-04.2003 பி.ப. 4மணி (திங்கள்) குறிப்பு: கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்யவும். சி.பவானந்தன் நிர்வாகி. (3078)

### தவறிவிட்டது

பொன்னையா சிறிதரன் ஆகிய எனது அடையாள அட்டையும் (711182543 V) முக்கிய ஆவணம் அடங்கிய கைப்பையும் பரந்தன் சந்திக்கும் ஆனையிறவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். (3081)

### அறிவுடைமை கல்வி நிலையம் கிளிநொச்சி

A/L 2004,2005ஆம் ஆண்டிற்கான, கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக புதிய பிரிவு வகுப் புக்கள் ஆரம்பம். 14-04-2003 பி.ப. 3.00 மணிக்கு. குறிப்பு: கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு யாழ். பிரபல ஆசிரியரின் சேவை பெறப்படும். சி.பவானந்தன் நிர்வாகி. (3077)


# வன்னியில் கணித, ஆங்கிலப் பாடங்களில் பின்தங்கிய நிலையில் மாணவர்கள்

## ஆசிரியர்களுக்கு மோசமான பற்றாக்குறையிருப்பதே காரணம்

வன்னி மாவட்டப் பாடசாலைகளில் கணித, ஆங்கிலப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மோசமான பற்றாக்குறை இருப்பதனால் இம் மாணவர்கள் இப்பாடங்களில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 94 பாடசாலைகள் இயங்கி வருகின்ற நிலையில் கணித பாடம் கற்பிக்க 11 ஆசிரியர்களும், ஆங்கிலப் பாடம் கற்பிக்க 6 ஆசிரியர்களும் மட்டுமே நிர்ந்தரமாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

கிளி. வலய பாடசாலைகளில் மேற்படிப் பாடங்களில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலை குறித்து கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்புகொண்டபொழுது தெரிவிக்கையில்;

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 94 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 44 பாடசாலைகளில் க.பொ.த. (சா.த) வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால், இம் மாவட்டத்தில் 94 பாடசாலைகள் இயங்கிவரும் வேளையில் 6 நிரந்தர ஆங்கில ஆசிரியர்களே கடமை புரிந்து வருகின்றனர். இவ் அறுவரிலும் மூவர் கன்னியாஸ்திரிகளாவர். அதேபோன்று இம்மாவட்டத்தில் 11 கணித பாட ஆசிரியர்களே கடமை புரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி பாடங்களில் கல்விபயிலும் மாணவர்களுக்கு எவ்வாறு இக்கற்கை நெறிகளை முழுநிறைவாக பெற்றுக் கொடுக்க முடியும் என தெரிவித்துள்ளதுடன், மேற்படி பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படும் வரை இம் மாவட்ட மாணவர்களுக்கு இப்பாட கற்கை நெறியில் பூரண தேர்ச்சி பெறுவதென்பதும் மேலும் தற்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியேறும் ஆசிரியர்களில் 59 பேரில் ஒரே ஒருவரே ஆங்கில ஆசிரியப்பயிற்சி முடித்து வெளியேறியுள்ளார்.

இந்நிலையில் இம்மாவட்ட பாடசாலைகளில் இப் பாடங்களை கற்கும் மாணவர்களின் முன்னேற்றம் என்பது கேள்விக்குறியான விடயமாக அமைந்துள்ளது என கவலை தெரிவித்தார். (சோ.லோ)

## செயற்பாட்டுக் குழுக்கள் தெரிவு

வடமராட்சி கிழக்கில் உடுத்துறையில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கான வடமராட்சி கிராமங் களில் கிராமிய மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டுக்குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுவருகின்றன எதிர்வரும் 17ஆம்திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு கடற் புலிகளின் அரசியல்துறை செயலகத்தில், வடமராட்சிக் கிழக்குப் பிர தேசத்திற்கான மாவீரர் செயற்பாட்டுக்குழுத் தெரிவு இடம்பெற இருக்கின்றது என வடமராட்சி கிழக்கு அரசியல் துறையின் தெரிவிக்கின்றனர்.

## கணித விஞ்ஞான வகுப்புக்கள்

வடமராட்சிக் கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் அடுத்த தவணை முதல் க.பொ.த உயர்தரத்திற்கு கணித,விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பகுதியில் உயர்தர வகுப்பில் இதுவரை காலமும் வர்த்தக கலைப்பிரிவுகள் மட்டுமே நடைபெற்று வந்தன. இதனால் மாணவர்கள் கணித, விஞ்ஞான பாடங்களைக்கற்க யாழ், பருத்தித்துறைப் பகுதிகளுக்கு சென்றே கல்வி கற்க வேண்டிய நிலை இருந்தது. தற்போது பெற்றோரும் பழையமாணவர்களும் பொது அமைப்புகளும் மேற்கொண்ட அயராத முயற்சி யினால் கணித, விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தன் தலைமையில் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17, 18, 19, 20 ஆம் திகதிகளில் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளதால் இப் போட்டிகளில் விளையாட்டுக்கழகங்கள் கலந்துகொள்வது தொடர்பான முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப் படவுள்ளது.

எனவே பதிவுகளை மேற்கொண்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்களை அன்றையதினம் தவறாது சமுகம் தருமாறு கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் திரு.வே.சிவநேசன் வேண்டியுள்ளார். (சோ.லோ)


## பாராட்டுகிறோம்

க.பொ.த.(சா\த) பரீட்சையில் அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வி நிலையத்திற்கு பெருமை தேடித்தந்த மாணவர்களைப் பாராட்டுகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பா.மஞ்சுதன் | 8A | B | C | |
| யோ.யோகதீபன் | 7A | 2B | C | |
| இ.கௌசிகா | 6A | B | 2C | |
| வி.சுரேகா | 5A | 2B | 2C | |
| ச.மயூரதன் | 4A | 4B | C | S |

நிர்வாகி,
முல்லைக்கல்வி நிலையம் - தண்ணீரூற்று. (2834)

## வாடிக்கையாளர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்

சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப் பட்ட ஐஸ்கிறீம் வகைகளையும் குளிரான வகைகளையும் மற்றும் உணவுப் பண்டங்களையும் சுவைத்து மகிழ...

### அமுதகம்

யாழ் வீதி, திருமுறிகண்டி.

(சி 7845)

இரத்தம் சிந்தும் யுத்தம் வேண்டாம். மனிதனை மனிதன் பேணி வாழ மலரும் ஆண்டே வருக வருக எனியொரு யுத்தம் எமக்கும் வேண்டாம். இனிவரும் புதிய ஆண்டே நிரந்தர சமாதானம் எமக்காக வருக... வருக... வருக...

இவ்வாண்டில் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் — அன்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



### ஐங்கரன் உணவகம்

திருமுறிகண்டி

(சி 7846)


## துயர் பகிர்கின்றோம்

மல்லாவி பாலசுப்பிரமணிய ஆலய பிரதம குருக்களின் அன்புத்தாயார் 08.04.2003 அன்று செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ள துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் எமது ஆழ்ந்த துயரினையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

பாலசுப்பிரமணிய ஆலய,
நிர்வாகம்.

(2919)

## சாவு அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் கற்பகம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், இல-923 சிவிற் சென்ரர் வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் கற்பகம் 13.04.2003 அன்று காலமானார். இவர் ச.ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் நடேசபிள்ளை (கனடா), கணேசபிள்ளை கிராம சேவை உத்தியோகத்தர் நெடுங்கேணி, சிவகடாச்சிறி (சுவிஸ்) திருஞானபிள்ளை (கனடா), சிவகலாஜினி வட்டக்கச்சி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்ப ரஞ்சனி (கனடா), லீலாவதி (ஆசிரியர்) கனகராயன்குளம் ம.வி., பாலேந்திரன் (சுவிஸ்), நித்திய ராணி (கனடா), மதனகுமார் வட்டக்கச்சி ஆகியோரின் மாமியாரும் ஆவார். இவரின் இறுதிக் கிரியைகள் நேற்று 13.04.2003 மாலை 07 மணியளவில் வட்டக்கச்சியில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்
மதனகுமார்.

(சி-8072)


மலரும் புத்தாண்டில் எமது வாடிக்கையாளர்களுக்கு உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

தரமான, சுவையான சைவ, அசைவ உணவு வகைகளை கிளிநொச்சி நகரில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

### கற்பகம் இன்சுவையகம்

முதன்மைச்சாலை, கிளிநொச்சி.

(சி-7841)

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹொர"

பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் விவசாய இரசாயனம்

ஜினசேன லிமிட்டெட்டின் விவசாய சிற்றூர்திகள், உபகரணங்கள்

ஆகியவற்றின் வடபகுதிப்பிரதான களஞ்சியம்

### வேலும் மயிலும் களஞ்சியம்

353, முதன்மைச்சாலை, கிளிநொச்சி. (ஈழநாதம் பணிமனை முன்பாக)

வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள், விவசாய சேவை நிறுவனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், தொகை, சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனங்கள், உபகரணங்கள் என்பவற்றை நியாயவிலைக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

(சி-8070)

# அமெரிக்காவின் போர் ஆதிக்க வெறியை தடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும்

## ஐ.நா.வின் முன்னாள் ஆலோசகர்

(சென்னை)

**உலக நாடுகளின் எதிர்ப்பையும், கண்டனத்தையும் பொருட்படுத்தாமல் ஈராக் மீது போர் தொடுத்த அமெரிக்கா, மற்றைய நாடுகளின் மீதும் போர் தொடுக்கும் முன் அந்நாட்டின் ஆதிக்க வெறியை உலக நாடுகள் முழுமூச்சோடு தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஐ. நா.வின் முன்னாள் ஆலோசகர் பீ.எஸ். ராகவன் கேட்டுக்கொண்டுள்ளார்.**


ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து காந்திய நிறுவனங்களின் கூட்டமைப்பு சென்னையில் நேற்று நடத்திய அனைத்துக் கட்சி கூட்டத்தின்போதே அவர் இதனைத் கூறினார். இக்கூட்டத்தில் பாரதிய ஜனதா, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு அமெரிக்காவைக் கண்டித்துப் பேசினர்.

இங்கு உரையாற்றிய ஐ.நா.வின் முன்னாள் ஆலோசகர் மேலும் கூறுகையில்,ஈராக் மீதும் தன்னிச்சையாக போர் தொடுத்துள்ள அமெரிக்கா அடுத்து இந்தியா போன்ற நாடுகளின் மீது தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட முற்படும்.

தங்களுடைய பாதுகாப்புக்கு ஒரு நாடு விரோமாக செயற்படுகின்றது என்று நினைக்கின்றார்களோ அவர்களை அவர்களே நேரடியாக சென்று தாக்கலாம் என்றதொரு விதியை தாங்களே நிர்ணயித்துக் கொண்டுவிட்டார்கள்.

இந்த விதியை நிலைநாட்ட விட்டோமானால் அது உலகத்திற்கு பயங்கரமான தொரு விளைவை ஏற்படுத்தும். ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள 185 நாடுகளும் கரம் கோர்த்து இந்த விதியை நாங்கள் நிலை நாட்டவிடமாட்டோம் என்றதொரு முடிவை எடுக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து அமெரிக்காவின் இந்தப் போக்கிற்கு முடிவுகட்ட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.



மொசூல் நகரில் களவாடிய பொருட்களை வண்டியொன்றில் வைத்து இழுத்துச் செல்லும் இரு ஈராக்கியர்கள்.


### ஐ.நா.தூதர் வெளியேற்றம்

ஐக்கிய நாடுகளுக்கான ஈராக் தூதுவர் முகமப் அந்தூரி அமெரிக்காவைவிட்டு வெளியேறியுள்ளார். தற்போது ஈராக்கில் அமெரிக்க படைகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கையினால் ஈராக்கைத் தொடர்ந்தும் பிரதிநிதித்துவம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தூதுவர் அந்தூரி தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமதுகுடும்பத்தாரையும் நாட்டையும் நேரடியாகபார்வையிடவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.




ரஷ்யாவின் செண்ட்பீட்டர்ஸ் பேர்க்கட்டடத்தில் பிரான்ஸ் சனாதிபதி ஜாக்குஸ் சிராக், ரஷ்ய சனாதிபதி விளாடிமீர் புட்டின், ஜேர்மன் அதிபர் ஷ்ரோடர்.



தமது பாதுகாப்பையும் சமாதானத்தையும் வலியுறுத்தி பாக்தாத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஈராக்கியர்கள்.

## இராணுவ உதவி யளித்ததான குற்றச்சாட்டு நிராகரிப்பு

புஷ் மீது காஸ்ரோ பாய்ச்சல்

(டமாஸ்கஸ்)

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனின் அரசாங்கத்திற்கு இராணுவ உதவிகளை சிரியாவின் வழங்கியதாக அமெரிக்கா சுமத்தியுள்ள குற்றச் சாட்டை சிரியா வெளிவிவகார அமைச்சர் மறுத்துள்ளார்.

அமெரிக்க தனது குற்றச்சாட்டை முடிந்தால் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கட்டும் என்றும் அவர் சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க சனாதிபதி பெரும்பான்மையான அமெரிக்க மக்களின் கருத்துக்களை செவிமடுக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அணுவாயுதத் திட்டங்கள் தொடர்பாக பேச்சு நடத்த வடகொரியா இணக்கம்!

சந்தேகத்துக்குரிய அணுவாயுதத் திட்டங்கள் தொடர்பாக அமெரிக்காவுடன்பேச்சுவார்த்தைகளைநடத்தவடகொரியா இணக்கம் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இராஜதந்திர ரீதியில் அமெரிக்காவுடன் தொடர்பை ஏற்படுத்தவுள்ளதாகவும் அந்நாடு அறிவித்துள்ளது.

வடகொரியாவின் இந்த அறிவிப்பை அடுத்து அமெரிக்காவுடன் அந்த நாடு கொண்டுள்ள முரண்பாடுகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

## விமானம் தாங்கிக் கப்பல்கள் வளைகுடாவிலிருந்து திரும்பல்!

(வாஷிங்டன்)

வடைகுடாப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த "ஆபிரகாம் லிங்கன்" என்ற விமானம் தாங்கிக் கப்பலை அமெரிக்கா திருப்பி அழைத்துள்ளது.

அமெரிக்க கடற்படையை அப்பிராந்தியத்தில் இருந்து திரும்ப அழைத்துக்கொள்ளும் ஒரு முயற்சியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

விமானம் தாங்கிக் கப்பலான "நிமிட்ஸ்" வளைகுடாப் பகுதியில் இருந்து திருப்பி அழைக்கப்பட்டுவிட்டதாகவும் "கிட்டிகொக்" "கொன்சிலேசன்', 'பியூடா' 'ரூஸ்வெல்ட்' போன்ற அதன் சக போர் குழு கப்பல்களும் விரைவில் வளைகுடாப் பகுதியில் இருந்து விலக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டு யுத்தம் ஏற்படும் முபாரக் எச்சரிக்கை!

(கெய்ரோ)

ஈராக்கில் உள்நாட்டு யுத்தம் ஏற்படலாம் என்று எகிப்திய சனாதிபதி கொஸ்னி முபாரக் தெரிவித்துள்ளார்.

சுனி முஸ்லிம்களும், ஷியா பிரிவினரும், குர்திஷ் இனத்தவர்களும் ஒருவொருக்கொருவர் தம்மை அழித்துக்கொள்வார்கள் என்று அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.


குர்திஸ் இனத்தவர் தமக்கென சுதந்திரநாடு வேண்டும் என கோரிக்கை விடுத்துவருகின்றனர். ஆனால், பெரும்பாலான ஈராக் மக்கள், ஈராக் பிளவுபடுவதை விரும்பவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அணுவாயுத சாதனங்களை பாகிஸ்தான் பெறுகிறது

*சி.ஐ.ஏ. குற்றச்சாட்டு*

பல நாடுகளிடமிருந்தும் குறிப்பாக ஐரோப்பாவிடமிருந்து ஆணுவாயுதம் தொடர்பான சாதனங்களை பாகிஸ்தான் தொடர்ந்து பெற்று வருவதாகவும் நிறுவனங்கள் சில பாகிஸ்தானின் பலஸ்டிக் ஏவுகணைகளைந் திட்டத்திற்கு உதவி வருவதாகவும் அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

சீனநிறுவனங்களின் உதவியுடன் பலஸ்டிக் குறுத்தொலைவு ஏவுகணைகளை பாகிஸ்தான் உற்பத்தி செய்துள்ளது. என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சி.ஐ.பி. யின் அறிக்கை கூறுகின்றது.



பாக்தாத்தில் சோதனை நிலையமொன்றின் முன்னால் நடந்து செல்லும் அமெரிக்க படை வீரன்.


### அமெரிக்காவிடம் சரண்

(வாஷிங்டன்)

ஈராக்கின் ஆயுதத் திட்டத்தைக் கண்காணித்து வந்த சதாம் ஹுசைனின் மூத்த அறிவியல் ஆலோசகரான ஜெனரல் அமீர் அல் சாதித் அமெரிக்க படைகளிடம் சரணடைந்துள்ளார்.

இவர் சதாம் ஹுசைனின் இராணுவக் குழுவின் மிக மூத்த உறுப்பினராவார்.

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நிகழ்ந்தபோது ஈராக்கிய பிரதிநிதிகளுக்கு இவர் தலைமை தாங்கியவராவார்.




பாக்தாத்தில் வர்த்தக நிலையங்களை கொள்ளையிட முயலும் சில நகர வாசிகளிடமிருந்து அவற்றைப் பாதுகாக்கும் தீவிர முயற்சியில் ஈடுபடும் அமெரிக்க பொலிஸ் வீரர்.

# அமைதிப் படையும் மாறா வடுக்களும்

அமைதிப்படையாக வந்த இந்திய இராணுவம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பித்த காலம் அது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள மக்கள் இடம் பெயர்ந்து அயல் கிராமங்களில் தங்கியிருந்தனர். தங்கராசா குடும்பமும் இடம்பெயர்ந்து உடையார் கட்டுப்பகுதியில் உறவினர் வீடொன்றில் தஞ்சம் புகுந்தது. எப்பொழுதுமே இடப்பெயர்வுகளைச் சந்தித்திராத இவர்களுக்கு இந்த இடப்பெயர்வு பல அசௌகரியங்களைக் கொடுத்தது.

தங்கராசாவுக்கு இராணுவ உலங்குவானூர்திகள் அல்லது விமானங்கள் வானத்தில் பறக்கும் சத்தம் கேட்டால்போதும் ஓடிப்போய் எங்காவது பதுங்கிக் கொள்வார்.

அது மேசைக்குக் கீழாகவும் இருக்கலாம், மரத்தின் அடியாகவும் இருக்கலாம், வீட்டு மூலையாகவும் இருக்கலாம், தான் பாதுகாப்பாக இருப்பதாக அவர் உணர்ந்து கொள்வார்.

விமானங்களும், உலங்குவானூர்திகளும் வானத்தில் பறக்கும்போது அதனைப் புதினம் பார்க்கும் ஏனையவர்களுக்கு இவரின் நடவடிக்கை சிரிப்பை உண்டுபண்ணும்.

இரண்டு குழந்தைகளுடனான இக்குடும்பம் இடம் பெயர்ந்துவாழ்ந்து வந்தாலும் அக்குடும் பத்தில் சந்தோசத்துக்குப் பஞ்சமில்லை. தங்கராசாவின் மனைவி பவளம் எப்பொழுதும் குங்குமப் பொட்டிட்டு சிரித்த முகத்துடன் சந்தோசமாக இருப்பார்.

பவளம் அப்போது கருவுற்றிருந்தார். இவர் சிகிச்சைக்காக தருமபுரம் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும். இதனால் அக்குடும்பம் விசுவமடுப்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்று, அங்கு தங்கி இருந்தது. பிரசவத்தினை தருமபுரம் வைத்தியசாலையில் வைத்துக்கொள்வதற்காக இவர்கள் விசுவமடுப் பகுதியில் குடியிருந்தனர்.

இக்காலப்பகுதியில் புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பிக்கொண்டிருந்தனர்.


தருமபுரம் வைத்தியசாலையில் பிரசவத்தை முடித்துக் கொண்டு ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றுக்கொண்ட பவளம் குடும்பம் புதுக்குடியிருப்புக்கு திரும்பிவந்தது.

ஆனாலும் இவர்கள் குடியிருந்த கோம்பாவில் பகுதிக்கு மக்கள் திரும்பிச் செல்லாததால், மந்துவில் பகுதியில் இவர்கள் உறவினர் வீட்டில் தங்கியிருந்தனர்.

கோம்பாவில் பகுதியில் மக்கள் குடியிருக்கின்றார்கள் என்று அறிந்ததும் 18 நாள் வயதுடைய கைக்குழந்தையுடன் அக்குடும்பமும் தமது வீட்டுக்குவந்தது.

இவர்கள் தமது வீட்டுக்கு வந்து சில மணிநேரம் ஆகியிருக்கும். அரைமைல் தூரத்தில் வெடிச்சத் தங்கள் கேட்டன.

இவர்கள் எல்லோரையும் பயம் தொற்றிக்கொண்டது.



அயலில் இருந்தவர்கள் காட்டுப்பகுதிகளுக்கு ஓடி விட்டார்கள். இவர்கள் குழந்தையுடன் எங்கு ஓடுவது என்று தெரியாது வீட்டுக்குள் இருந்தார்கள்.

அப்போது ஆட்கள் நடமாடும் சத்தம் கேட்டது. இந்திய இராணுவம் நாலாபுறமாகவும் வந்து கொண்டிருந்தது. இவர்கள் இருந்த வீட்டை நோக்கியும் அவர்கள் ஓடி வந்தார்கள்.

> பல நாட்களின் பின் இவர்கள் இருவரையும் இந்திய இராணுவம் தனது வாகனத்தில் உயிருடன் கட்டி கதறக் கதற வீதி வீதியாக இழுத்துச் சென்றதைக் கண்ட மக்கள் கூறிய கதைகள்தான் பவளத்தின் காதுகளையும் எட்டியது.

இராணுவ விமானச் சத்தம் கேட்டாலே ஓடி ஒழித்துக்கொள்ளும் தங்கராசாவுக்கு அந்த இராணுவத்தை நேரில் கண்டதும் என்ன செய்வதென்றே புரியவில்லை.

இராணுவத்துக்குப் பயந்து இடம் பெயர்ந்து பல இடங்களுக்கும் அலைந்து திரிந்து விட்டு அன்றுதான் வீட்டுக்கு வந்திருந்த அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

''டேய் எல்.ரி.ரி.ஈ'' அதட்டினான் இந்திய இராணுவம்.

"இல்லை சேர் நாங்கள் எல்.ரி.ரி.ஈ இல்லை சேர்" தங்கராசா இராணுவத்தை பார்த்துக் கும்பிட்டபடி சொன்னான்.

இராணுவத்தினன் ஒருவன் துப்பாக்கிப் பிடியாலும் முனையாலும் அவரைப் பலமாகத் தாக்கினான். அத்துடன் அங்கு அவர்களுடன் இருந்த தங்கராசாவின் மனைவியின் தம்பியையும் பலமாகத் தாக்கினான்.

பவளம் தனது கைக்குழந்தையையும் தூக்கிக் கொண்டு பெரும் சத்தமெடுத்து அழுதார். அப்போது அங்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவன் அவரையும் அடித்து இருத்தினான். அவர்களுடன் இருந்த பவளத்தின் வயதான தாயும், தந்தையும், தங்கராசாவையும் அவரின் மைத்துனரையும் எதுவும் செய்யவேண்டாமென்று கெஞ்சினார்கள்.

இராணுவம் தங்கராசாவையும், அவரது மைத்துனரையும் தங்களுடன் நடக்கும்படி கூறியது.

இதைப் பார்த்ததும் பவளம் மீண்டும் அழுதுகொண்டு எழுந்து ஓடி வந்து மறிக்க முற்பட்டாள். ஆனால் உடனே அவ்விடத்துக்கு ஓடி வந்த சிப்பாய் ஒருவன் அவளை அடித்து இருத்திவிட்டு இருந்தவளின் பிடரியில் துப்பாக்கிப் பிடியால் பலமாகத் தாக்கினான்.

அவளது முகம் குப்புற நிலத்தில் வந்து அடிபட்டது. மடியில் இருந்த கைக்குழந்தையும் நெரிந்து வீரிட்டு அழுதது. அவர் தலைசுற்றி சுயநினைவிழந்து விட்டார். இராணுவம் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டது. அதற்குப் பின்பு இதுவரை இருவரையும் பவளம் காணவே இல்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை எதுவுமே தெரியாது.

அன்று இருட்டிவிட்டதால் அவர்கள் எங்கும் செல்லவில்லை. மறுநாள் கைக்குழந்தையுடன் புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்த இராணுவ முகாமுக்கு சென்றார்கள். இருவரையும் பற்றி விசாரித்தார்கள். இராணுவம் தங்களுக்கு எதுவுமே தெரியாது. தாங்கள் யாரையும் பிடிக்கவில்லை என்று கூறிவிட்டார்கள்.

மறுநாள் முல்லைத்தீவுக்குச் சென்று அங்கு விசாரித்தார்கள். அவர்களும் தங்களுக்கு எதுவுமே தெரியாது என்று கைவிரித்தனர்.

பவளம் ஒவ்வொரு நாளும் மாறி மாறி அங்கிருந்த எல்லா இந்திய இராணுவ முகாங்களுக்கும் சென்று விசாரித்தார். பலன் கிட்டவே இல்லை. இறுதியில் வவுனியாவரை சென்று அங்கு இராணுவ உயரதிகாரியைச் சந்தித்து தனது நிலைமையினை எடுத்துக் கூறினார். அழுது புரண்டார். ஆனால் அவனும் தங்கள் இராணுவத்தினர் யாரையும் கைது செய்யவில்லை என்று திடமாகவே கூறிவிட்டான்.

தனது கைக்குழந்தையுடன் தொடர்ந்தும் அலைந்து திரிவதற்கு அவரது உடல்நிலை இடம்கொடுக்கவில்லை. எப்போதாவது அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தாள். ஆனால் பலன் எதுவுமில்லை.

ஆனால், பல நாட்களின் பின் இவர்கள் இருவரையும் இந்திய இராணுவம் தனது வாகனத்தில் உயிருடன் கட்டி கதறக் கதற வீதி வீதியாக இழுத்துச் சென்றதைக் கண்ட மக்கள் கூறிய கதைகள்தான் பவளத்தின் காதுகளையும் எட்டியது.

தனது மனதில் அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை பவளத்துக்கு கொஞ்சம் கொஞ்சமாக கரைய ஆரம்பித்தது.

எமது மண்ணில் அமைதி காக்க வந்தவர்கள் இப்படி எத்தனை குடும்பங்களின் அமைதியை கெடுத்துவிட்டார்கள்.

ஜெயக்குமார்

# தோல் பதனிடல் பயிற்சி; ஆளணி தெரிவிற்கு ஏற்பாடு!

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்ட செயலகமும், வடக்கு -கிழக்கு மாகாணசபையின் தொழிற்துறைத் திணைக்களமும் இணைந்து கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கென அமைக்க இருக்கும் தோல் பதனிடல் நிலையத்தின் கொள்வனவாளர், உற்பத்தியாளர், சந்தைப்படுத்துனர் பணிநிலைக்கான பயிற்சி வழங்குவதற்கு ஆளணித் தெரிவு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பங்குபற்றி பயிற்சி பெறவிரும்பும் விண்ணப்பதாரிகளை எதிர் வரும் 22-04-2003 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் த.பொ.மே. நிறுவனத்தின் முல்லை மாவட்ட செயலகத்தில் சுய விபரக் கோவையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(26)

# தளபாட வசதி இன்மையால் மாணவர்கள் பாதிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் பாடசாலைகள் ஆரம்பமாகி ஒரு வருடம் முடிவடைந்தும் இன்னமும் மாணவர்கள் தளபாட வசதிகள் இன்மையால் தரையிலிருந்தே கல்விகற்கவேண்டிய நிலையிலேயே உள்ளனர்.

இப்பாடசாலைகளுக்கு தளபாடங்கள் இன்னமும் வந்து சேராமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இப்பாடசாலைகளுக்கு தளபாடங்களைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை நிக்கொட் நிறுவனம் ஏற்று 6 மாதங்களாகியும் அவை வந்து சேரவில்லை.இப்பிரதேசத்தில் 10 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 13 வரை உள்ள மாணவர்கள் தரையிருந்தே கற்று வருகின்றனர். (11)

- வடமராட்சி கிழக்கு -

# கிராமிய அபிவிருத்திச் செயலக புதிய கட்டடத் திறப்புவிழா

சிரான் நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடைமுறைப்படுத்தப்படும் ஆழியவளை கிராம அபிவிருத்திச் செயலகத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா வரும் புதன்கிழமை மாலை மூன்று மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை கட்டடத்தைத் திறந்துவைப்பார். (11)

# மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவான பாடசாலைகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயமட்ட உடற் பயிற்சிப் போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவான பாடசாலைகளின் பெயர்விபரம் பின்வருமாறு:

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தினை கிளிநொச்சி ம.வி.யும், பூநகரி முழங்காவில் ம.வியும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தினை இராம நாதபுரம் அ.த.க. பாடசாலையும், பெண்கள் பிரிவில் இரண்டாமிடத்தினை இராமநாதபுரம் ம.வி.யும் பெற்று மாகாண மட்டப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஒன்றிணைவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள சிலாவத்தையில் இயங்கும் இரண்டு பாடசாலைகள் ஒன்றிணைந்து ஒரு பாடசாலையாக இயங்கவுள்ளது. சிலாவத்தையில் தற்போது இயங்கிவரும் மு/சிலாவத்தை றோ.க பாடசாலையும், மு/சிலாவத்தை இ.த.க பாடசாலையும் ஒன்றிணைந்து மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் எனும் புதிய பெயரில் இயங்கவுள்ளது.

# "உதயமாகும் சுபானு வருடப் புத்தாண்டில் மகிழ்ச்சிகள் பல பொங்கட்டும்"

சுபானு வருடம் சித்திரை மாதம் 1ஆம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 9மணி 52 நிமிடத்தில் பூர்வாபட்ச திரியோதசித்திதியில் பூர நட்சத்திர நான்காம் பாதத்தில் பிறக்கின்றது.

அன்று காலையில் மருத்துநீர தேய்த்து சிரசில் ஆல் இலையும் காலில் விளாவிலையும் வைத்து ஸ்நானம் செய்து, புதியவஸ்திரம் அணிந்து, தெய்வவழிபாடு செய்ய வேண்டும். உற்றார் உறவினர் நண்பர்களுடன் அறுசுவை உணவருந்தி, புராண இதிகாசங்களை ஆய்வுசெய்து நாட்டில் சமாதானம், அமைதி நிலவ இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. காலச்சக்கரம் சுழல்கின்றது. நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங்களாக மாதங்கள் வருடங்களாக உருண்டோடிக் கொண்டேயிருக்கின்றது. எதிர்கால வாழ்வில் நம்பிக்கை எதிர்பார்ப்பு என்பவற்றை ஏராளமாகச் சுமந்து கொண்டு பிறக்கும் ஒவ்வொரு வருடத்தையும் நாம் எதிர்நோக்குகின்றோம். இதே நம்பிக்கையுடன்தான் நாம் அனைவரும் பிறக்கும் இந்தப் புத்தாண்டை வரவேற்கின்றோம். பழைய சித்திரபானு வருடம் விடைபெற்றுச் செல்ல புதிய சுபானு வருடம் பிறக்கின்றது. சித்திரைப்புத்தாண்டு விசேஷமாக இலங்கையிலுள்ள தமிழ் சிங்கள மக்களால் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது இரண்டு வேறு சமூகத்தினரால் கொண்டாடப்படும் திருநாள் ஆகும்.

மரபுவழியாக கொண்டாடப்படும் இத்தினத்தில் பழைய வருடத்தில் செய்த பாவகர்மங்கள், குறைகள் நீங்கவும், உடல் உஷ்ணம் குறையவும் மருத்துநீர முக்கியமானதாக அமைகின்றது. நீண்ட காலமாக எம்மை வாட்டிவதைக்கும் நோய் பிணிகளும் இவ்வாறு மருத்துநீர வைத்து நீராடுவதால் மறைந்துவிடும் என்பது இந்துக்களின் மரபுரீதியான நம்பிக்கையாகும்.


கண்கண்ட தெய்வம் என்று நாம் சூரியனையே வழிபடுகின்றோம். மாதங்கள் வருடங்கள் என்பன கூட சூரியனையே வைத்துக் கணக்கிடப்படுகின்றது. இதனாலேயே சூரிய நமஸ்காரம் இந்துக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது. இந்த உலகம் இயக்கம் பெறுவதற்கு தேவையான சக்தியையும், ஒளியையும் வழங்குபவர் சூரியபகவான். அவரது தலைமையில் இருப்பவர்கள் நவக்கிரகங்கள். ஆகையினால் நவக்கிரகங்களை இப்புத்தாண்டு தினத்தில் வழிபடுவது அவசியம். அவரவர் வசதிக்கேற்ப ஆசிகள் பெறுவதும் அன்பளிப்புச் செய்வதும் மிக நன்று.

ஆடல், பாடல், கலை, கலாச்சார நிகழ்ச்சிகள் புத்தாண்டின் சிறப்பு அம்சமாகும். தமது மக்கள் இன்றும் இந்த மரபுவழியான விளையாட்டுக்களில் ஈடுபடுவதைக் காணலாம்.

எனவே நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாகவே நடக்கட்டும். நம்மிடையேஉள்ள சில தீய பழக்கங்களுக்கும், தீய குணங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்து பிறக்கும் புதுவருடத்தில் புதிய மனிதனாக வாழ திடசங்கற்பம் பூண்டுகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் வாழ்வில் இதுஒரு சமாதானப்புதுவருடமாக மலர்ந்துள்ளது. யுத்தம் மட்டுமே ஒரே தெரிவாக அமைகின்ற வன்முறை முரண்பாடுகளில் முரண்படும் தரப்பினரை பரஸ்பர நம்பிக்கையை நிலை நாட்டக் கூடியவகையில் சமாதானத்தை மாற்றுத் தெரிவாக உருவாக்குதல் முக்கியமானதாகும்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எடுக்கப்பட்ட விடயங்கள் முற்றுமுழுதாகஅமுல் செய்ய முடியாதிருப்பதை நாம் எம் கண்ணூடாகக் காண்கின்றோம். மக்களின் இயல்பு வாழ்க்கை, பொருளாதார மேம்பாடு, வைத்தியவசதி, கல்வி, கலாசார அலுவல்கள்



மற்றும் அடிப்படைத் தேவைகள் முழுமை பெறாத நிலையில் உள்ளன. விவசாயத்தினைப் பொறுத்தமட்டிலும் எதிர்பார்த்த பலன்கிட்டவில்லை. ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக நடந்த உக்கிர மான போர் இரு ஆண்டுகளாக ஓய்வு பெற்றுக் காணப்படுகின்றது. துவக்குகள் சாய்ந்து வெடி ஓசைகள் ஒலிக்கவில்லை. தமிழ் மக்கள் நிம்மதியாக உலாவித்திரிய புதியவழி பிறந்துள்ளது. இடையில் சில அசம்பாவிதங்கள் பொறுத்துக்கொள்ள முடியாத நிகழ்வுகள் நடந்திருப்பதை நாம் அறிவோம். இருந்தும் சமாதானத்தைக் கடைப்பிடிப்பதில் எம்மவர்கள் காட்டும் அக்கறை பாராட்டுக்குரியதுவே. இந்தச் சமாதானச் சூழலைப் பேணிப்பாதுகாத்து எமக்குக் கிடைக்க வேண்டிய சுயநிர்ணய உரிமையைப்பெற ஒவ்வொரு தமிழ் மகனும் ஊக்கப்படவேண்டிய நேரம் இது.

இந்த மண்ணின் விடிவிற்காகப் போராடி மரணித்த மாவீரர்களை நாம் நினைவுகூர்ந்து, மரித்தவர்களின் கனவாக எஞ்சியுள்ள மக்கள் மாளாமல் மண்ணின் மீது சரித்திரங்கள் தோன்றிட சுற்றத்தினர்களுடன் சந்தோஷமாக வாழ வழிபிறக்க வேண்டும்.

வேட்டுக்கள் ஒலிகேளாமல் அமைதியாக விடிகின்ற ஒருபொழுது காட்டும் பாங்கில், நாட்டில் நீதி நெறிவாழ, மாந்தர் நலமாக வாழ, புதியவழிகள் பிறக்க இப்புத்தாண்டு வழிசமைக்கவேண்டும்.

இன்றையதினம் பிரத்தியேகமாக புதுவருடமொன்றின் ஆரம்பமாகும். இன்று மகிழ்ச்சியிலும் ஆனந்தக்களிப்பிலும் திளைப்போர் இன்றைய தினத்துக்கு ஒரு பிரத்தியேக முக்கியத்துவம் உண்டு என்பதை நன்கறிவார்கள். நிரந்தர சமாதானத்திற்கு வழிபிறக்க வேண்டும் என்பதே எமது எண்ணம்.

வெகுவிரைவில் இந்த நம்பிக்கை நிறைவேறுமென்று அனைத்து தமிழ் மக்களுடன் சேர்ந்து நாமும் எதிர்பார்க்கிறோம்.

அனைவருக்கும் மகிழ்ச்சியும், சௌபாக்கியமும் நிறைந்த அற்புதமான ஒரு புத்தாண்டாக அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ☼

சிவஸ்ரீ.கு.இரத்தினேஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு)
கிளிநொச்சி முருகன் தேவஸ்தானம்.

தங்க மாளிகை தங்க மாளிகை தங்க மாளிகை

சாந்தி, சமாதானம் பெற்று இன்புற்று வாழ
எமது இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்



தங்கமாளிகை



சிறுவர் முதல்
பெரியோர்வரை
750 ரூபா முதல் 7500 வரை
மிதி வண்டிகளும்,
உதிரிப்பாகங்களும்
அன்பளிப்புப் பொருட்களும்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

10 வருட உத்தரவாதம்
HERO CYCLES
08 வருட உத்தரவாதம்

தங்கமாளிகை
ஈருருளி பல்பொருள் உதிரிகள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(கி-7831)
தங்க மாளிகை தங்க மாளிகை தங்க மாளிகை

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
மகிழ்வடைகின்றோம்.

மனம் மகிழும் புத்தாண்டில் உங்கள்
கோலத்தை எந்நாளும் பார்த்து மகிழ்ந்திட

அருச்சுனா புகைப்படக் கலையகம்

இன்று தனது சிறப்பு படப்பிடிப்பு சேவையை
வழங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் மகிழ்வோடு அறியத்தருகின்றது.

- உங்கள் மனதை விட்டகலா நிகழ்வுகளைப் படம் பிடிப்பதற்கும்
- நவீன கொம்பியூட்டர், என்லாயற், மூலம் படங்களை பிரதி செய்வதற்கும்
- வகைவகையான லெமநேற்றிங் செய்து பெற்றுக் கொள்வதற்கும்

நீங்கள் பயணிக்க வேண்டிய இடம்

அருச்சுனா
புகைப்படக்கலையகம்
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி
(கி-7738)

## யாழரசன் இரும்பகம்

டிப்போ வீதி, கிளிநொச்சி

கட்டடப் [illegible]ருட்கள், பெயின்ற் வகைகள், ஸ்பிரே பெயின்ற் வகைகள், வாட்டப்பம் உதிரிப்பாகங்கள், தோட்டப்பொருட்கள்.

பெயின்ட்

(குறடு or சுத்தியல்)

சாவிசாமான்கள்



(சி-7838)

பரம சூரியா இரும்பகம்

தற்பொழுது யாழரசன் இரும்பகமாக மாற்றப்பட்டுள்ளது என்பதனை

சகலவாடிக்கையாளருக்கும் அறியத் தருகிறோம்

ஆடவர், மகளிர், குழந்தைகள் என பலரும் கவரும் புடைவை வகைகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள



## அமைதி புடைவை வாணியம்

சந்தை உட்புறம் கிளிநொச்சி



சி-7842

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

## 2005ற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

16-04-2003 காலை 9.00 மணி

கலை, வர்த்தகம், விஞ்ஞானம்,

G.A.Q. புவியியல், சூழலியல், தமிழ்

தரம் – 3,4,11 மீட்டல்

ஆரம்பமாகும் இடங்கள்

அமுதன் கல்வி நிலையம் புதுக்குடியிருப்பு | சயன்ஸ்கோல் புதுக்குடியிருப்பு

2837

மீண்டும் யாழ். நகரில் யாழ் ஒளி என்னும் பெயரில் K.S.R. போட்டோ நிறுவனம் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

யாழ். ஒளி. வீடியோ புகைப்பட சேவை.

* 766 K.K.S. வீதி, தட்டாதெருச்சந். யாழ்ப்பாணம்
* இல 5 கனகபுரம் வீதி (சந்தைக்கருகில்) கிளிநொச்சி.
* முருகன் கோவில் முன்பாக, ஸ்கந்தபுரம்.

(7843)

இன்று மலரும் சித்திரைப் புத்தாண்டில்

அனைவருக்கும் எம் அன்பு கனிந்த நல்வாழ்த்துக்கள்!

சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகள், கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகளுக்கு யாழ். நகரில் கைராசியான ஒரே ஸ்தாபனம்



## சீமாட்டி புடைவைக் கடல்

122 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

சி-7925

## வருடாந்த சித்திரை பௌர்ணமி விழா

மாங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்பகாமம் அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரை பௌர்ணமி விழா 16.04.2003 ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

(2830)

வன்னி நிலப்பரப்பின் தலைசிறந்த ஸ்தாபனமான

# மெய் மெய் உதிரிகள் வாணிபம் (MST)

தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அனைவரிற்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறது

இங்கு உழவு இயந்திர உதிரிகள்

மோட்டார் வாகன உதிரிகள்

போன்றவற்றையும்






பஜாஜ் ,பொக்சர் கலிபர், M80

சுசுக்கி மற்றும் TVS விக்டர்

போன்ற உதிரிகளையும் நியாய விலையில், உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். சாலை கிளிநொச்சி

(சி7840)

கூரைத்தகடு தயாரிப்பில் புதிய அலை
உங்கள் அருகில் புது வரவு
வன்னி மண்ணில்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

நம்பகமானது = உறுதிமிக்கது = பாதுகாப்பானது



# வசீகரன் கூரைத்தகடுகள்

வானம் பார்த்த பூமியாக்கப்பட்ட எமது வாழ்விடங்களை மீளப் புனரமைத்துக்கொள்ள குறைந்த விலையில் நிறைந்த பயனுறுதிமிக்க கூரைத்தகடுகளுக்கு நீங்கள்

நாடவேண்டிய ஒரே இடம்:
வசீகரன் கூரைத்தகடு தயாரிப்புத்தொழிலகம்
பழைய சந்தைவீதி,
கிளிநொச்சி.

கடந்த கால போர் நடவடிக்கைகளால் சிதைக்கப்பட்ட உங்கள்...

✦ வாழ்விடங்கள் ✦ பாடசாலைகள் ✦ வணக்கத்தலங்கள்



✦ அலுவலகங்கள் ✦ வர்த்தக நிலையங்கள்

என்பவற்றை எழிலுற புனரமைத்துக் கொள்ள கூரைத்தகடுளுக்கு
எங்குமே அலையத் தேவையில்லை

[illegible]

## வசீகரன் கூரைத்தகடுகள்

ஒன்றின் விலை - 65 ரூபா மட்டும்

[சி-8071]

விலை - மலிவு | தரம் - நிரந்தரம் | நகர்த்துவது சுலபம்



# தமிழீழ வைப்பகத்தின் புத்தாண்டு அறிமுகம்

## "சூரியஒளி" சமூக மேம்பாட்டுக் கடன் திட்டம்

**நோக்கம்:** அடிப்படை வசதிகளில் ஒன்றான மின்சார வசதியை வழங்குவதன் மூலம் ஊரக மேம்பாட்டுக்கு உதவுதல்.

- ★ மிகக்குறைந்த விலை
- ★ குறைந்த வட்டி வீதம்
- ★ இலகுவாக மீளச்செலுத்தும் முறை
- ★ பனல் - 10 வருடம் ஏனைய உதிரிகள் ஒரு வருடம் உத்தரவாதம்
- ★ போக்குவரத்து இணைப்புக்கள் இலவசம்




**நீங்கள் செய்யவேண்டியது:**

- ★ தமிழீழ நிர்வாக அமைப்பு ஒன்றின் பணியாளரா?
- ★ சிறிலங்கா அரச நிர்வாக அமைப்பு ஒன்றின் பணியாளரா?
- ★ சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவரா எவராயினும்?

உங்கள் வீட்டுக்கு, ஊருக்கு ஒளியூட்ட புத்தாண்டு நன்நாளில் உங்கள் சேமிப்புக் கணக்கு ஒன்றில் உருபா 5000/= நிலுவையைப் பேணுங்கள். / புதிய கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.

## தமிழீழ வைப்பகம்
## Bank Of Tamileelam

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

[சி-8067]

புத்தாண்டு வாழ்த்துக்கள்



பிள்ளையார் பல்பொருள் உதிரிவாணிபம்

யாழ் சாலை முருகன் கோவில் முன்பாக கிளிநொச்சி





கட்டடப்பொருட்கள் வாகன உதிரிப்பாகங்கள் என்பனவற்றைமலிவாகவும் தரமாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

நாடவேண்டிய இடங்கள்:

யாழ் சாலை, கிளிநொச்சி.

துணுக்காய் சாலை, மல்லாவி.

[சி–7847]

புத்தாண்டே துயர் தீர்க்க வந்திடுவாய்....!



மங்கலம் பொங்க
மனையெல்லாம் பால் பொங்க
சங்கத் தமிழிசைக்கும் தரணியில்
தெங்கு பனம் சிறக்க
சீரான சுபானுவெனும் புத்தாண்டே
பொங்கு துயர் தீர்க்க வந்திடுவாய்
என வாழ்த்துகின்றோம்.

**அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**

கிளி/ப.தெ.வ.அ.கூ. சங்கம், கிளிநொச்சி

[சி–7837]

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !



> இளைய தலைமுறைகளுக்கேற்ற றெடிமேட் ஆடை வகைகள்!
> சாறிகளில் எத்தனையோ வகை!
> பஞ்சாபி ஹிற், சோளி ஹிற் எத்தனையோ டிசைன்களில் எண்ணற்றவை.

இவை அனைத்தையும் பெற்றிட ஒரு முறை விஜயம் செய்து பாருங்களேன்.

**ராசி சில்க்ஸ்**
70, 71A நவீன சந்தை
உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P: 021-222 5571

**நல்லி சில்க்ஸ்**
121/1 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 5573

(சி-7926)

**தங்கமாளிகை**

யாழ்சாலை கிளிநொச்சி

புதுவருடத்தை முன்னிட்டு தங்கமாளிகை ஸ்தாபனத்தாரிடம் பரிசு பெற்றவர்கள் விபரம்.

முதலாம் பரிசு
[ரேடியோ NO-1]
க.விவேகானந்தன்,
D–5 பரந்தன்.

நான்காம் பரிசு
[மணிக்கூடு NO–3]
கு.சுதாகரன்,
கோணாவில்.

இரண்டாம் பரிசு
[ரேடியோ NO–7]
சுமலதாஸ்,
ஜெயந்திநகர்.

ஐந்தாம் பரிசு
[மணிக்கூடு NO–5]
சந்திரசேகரன்,
கிருஸ்ணபுரம்.

மூன்றாம் பரிசு
[ரேடியோ NO–8]
ச.விநாயகமூர்த்தி,
முரசுமோட்டை.

ஆறாம் பரிசு
[மணிக்கூடு NO–2]
ப.கேதீஸ்வரன்
விசுவமடு.

(சி-7848)

ஓவ்செற் முறையில் அழகான தரமான

**அழகன் பதிப்பகம்**

அச்சு வேலைகளை செய்ய

முதன்மைச் சாலை கிளிநொச்சி

பயோட்டினெக்ஸ் - E

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது

**அழகிய கூந்தலின் ரகசியம்**

**எது உங்கள் பிரச்சினை ?**



இலங்கையான பயோட்டினெக்ஸ் –E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பயோட்டினுடன் விட்டமின் – E யும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

பாவனை முறை தினம் 2கப்சியூல்கள் 3மாத காலத்திற்கு பாவிக்கவும்




வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மசி,
[பிள்ளையார் மருந்தகம்]
கிளிநொச்சி.

யாழ் முகவர்:
ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎021 2223191

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி.7839)

**BIOTINEX-E**

Marketed By: **Arkem Colombo**
Tel:470290, 075-344436 Email : arkem@sltnet.lk

கணினி சேவைகளுடன் இன்று உதயமாகின்றது

வன்னி மண்ணில்....

உங்கள் அருகில்

கணினி மையம்

**The Computer Centre (TCC)**

தகவல் தொழில்நுட்ப கணினி சேவைகளாவன:

1) கணினி பராமரிப்பு, பாதுகாப்பு திருத்தம்
2) SoftWare, HARD Ware விநியோகம்
3) கணினி வலைப்பின்னல் (Network சேவை)
4) INTERNET, E-Mail இலவச இணைப்பு
5) கணினி மற்றும் அதனுடன் கூடிய சகல பாவனைப் பொருட்கள் உத்தரவாதத்துடன் விநியோகம்
6) விநி யோகத்தின் பின்னான சேவைகள்
7) தமிழ்மொழி மூலமான இலகுநிகழ்சித்திட்ட வடிவமைப்புக்கள்(தங்களின் தேவைக்கேற்ப)
8) INTERNET மூலமான தகவல்கள் பெற்றுக்கொடுத்தல் தொடர்ந்து இன்னும் பல சேவைகள் உங்களிற்கு
9) CD யிலிருந்து CDக்கு, UHF இலிருந்து CD க்கு COPy செய்தல் அறிமுகமாகின்றன.

உங்கள் கணினி தொடர்பான பல்வேறு பிரச்சினைகள், ஆலோசனைகள், தேவைகள் ஆகிய வற்றிற்கு நீங்கள் இன்று எங்கும் செல்லத் தேவை இல்லை.
உலகெங்கும் உள்ள உற்பத்தியாளரிடம் இருந்து இன்ரனெற் மூலம் சகல வகையான தேவைகளும் பெற்றுக் கொடுக்கப்படும்

**The Computer Centre (TCC)**

கணினி மையம்
யாழ் சாலை-கிளிநொச்சி

(சி-8069)



வழமைதாரர்கள் அனைவருக்கும்
கிராமிய அபிவிருத்தி வங்கியின்



**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

என்றும் உங்கள் வாழ்விற்கு ஒளியமூட்டும் கிராமிய அபிவிருத்தி வங்கி

சுபானு புத்தாண்டை முன்னிட்டு இன்று பி.ப 2.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை எமது வங்கியில் கொடுக்கல் வாங்கல் சேவை நடைபெறும் என்பதை வழமைதாரர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

**கிராமிய அபிவிருத்தி வங்கி முயற்சியாளர்களின் குடும்ப வங்கி**

(சி-8068)



# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி
# SOCIO ECONOMIC DEVELOPMENT BANK

எமது வாடிக்கையாளர்களுக்கு உளங்கனிந்த **புத்தாண்டு வாழ்த்துக்களை** தெரிவித்துக் கொள்கின்றோம்

**எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்!**
**உங்களின் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்!**

- உங்களின் வாசலிலேயே சேமிப்புக்கணக்குகளை ஆரம்பிக்கலாம்.
- சேமிப்புகளுக்கு அதிகூடிய வட்டி.
- சேமிப்புக்கெதிராக கடன் பெறும் வாய்ப்பு.
- சுயதொழில் முயற்சிக்கான கடன்கள்.
- இலகுவான தவணைக்கால மீளளிப்புகள்.

**சேமிப்புத்திட்டங்கள்**

- எதிர்கால எழில் – சிறார்களுக்கானது
- தாருகம் – மாணவர்களுக்கானது
- மகளிர் மான்மியம் – மகளிருக்கு
- தோட்டத்தேட்டம் – விவசாயிகளுக்கு
- உழைப்பின் ஊற்று – தொழில் புரிவோருக்கு
- வாழ்வின் வளம் – வலுவிழந்தோருக்கு




**மற்றும் நிலையான வைப்புகள்**

**கிளைகள் :** கிளிநொச்சி ~ புதுக்குடியிருப்பு

(சி.7932)

# ஆழ்மன உணர்வுகளின் வெளிப்பாடுகளே இங்கு எம்முன் நிகழ்த்தப்படுகின்றன

## ~மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி

மானுடத்தின் தமிழ் கூடலின் ஆழம், அர்த்தபரிமாணம் மிகவும் முக்கியமானது. இங்கு நிகழ்த்தப் படுவது வெறும் கலை வெளிப்பாடு கள் அல்ல. எங்கள் ஆழ்மன உணர் வுகளின் வெளிப்பாடு என திரு கோணமலையில் இடம்பெற்ற இசை, நடன நாடகவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

இதனை எங்களுடைய தலைநக ரத்தில் நாங்கள் வெளிப்படுத்து வதற்கான காலம் மானுடத்தில் தமிழ் கூடல் மூலமாக அமைக்கப் பட்டுள்ளது.

இதற்குரிய காலம் பத்தொன்ப தினாயிரம் மாவீரர்களின் இரத்தத் தால் தியாகத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.

நாங்கள் இங்கு ஒன்றுகூடி இருக் கும் இந்த நாட்கள் எங்களுடைய வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனென்றால் நாங்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இனப்படுகொலை என்பது அந்த இனத்தின் தேசியத்தை இல்லாது ஒழிப்பது. அந்த தேசியத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று அந்த இனத்துக்கே சொந்தமான



கலை, பண்பாட்டு அம்சங்கள்.

அந்தக் கலை, பண்பாட்டு அம்சங்களுக்கூடாகத்தான் அந்த இனத்தின் உணர்வு கட்டிக்காக்கப் படுகின்றது. அந்த உணர்வு வெளிப் படுத்தப்படுகின்றது. உணர்வின் மூலமாக அவர்கள் ஒன்று சேர்கின் றார்கள். அந்த தேசியம் அங்கு கட்டி வளர்க்கப்படுகின்றது.

எமது விடுதலை போராட்ட வரலாற்றில் பல நெருக்கடியான காலகட்டங்களை நாங்கள் கடந்து வந்திருக்கின்றோம். முற்றுகைக்கு உட்பட்டிருந்த காலங்கள் இருந்தது.

தமிழர்கள் தங்களுடைய ஆழ்மன உணர்வுகளை வெளியிலே சொல்வதற்கு வாய்திறக்க முடியாத நாட்களை, மாதங்களை, வருடங் களைக் கடந்து வந்திருக்கின் றார்கள்.

ஆனால் இன்று இந்த விடுத லைப் போராட்டத்தின் வளர்ச்சி எங்களுடைய தேசியத்தை உலக மெல்லாம் எடுத்துச் செல்லுமள வுக்கு உலகமெல்லாம் எங்களு டைய ஆழ்மன உணர்வுகளை, எங்களுடைய ஆழ்மனத்தின் தேவைகளை, எங்களுடைய உரிமைக்குரலை உலக மெல்லாம் உரத்து ஒலிக்கும் அளவிற்கு எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஒரு உச்சவளர்ச் சியைக் கண்டிருக்கின்றது.

இந்த விடுதலைப் போராட்டத் தின் வளர்ச்சிக்கும் எங்கள் மக்களின் விடுதலை உணர்வின் எழுச்சிக்கும் காரணமாக இருந்தது எங்களுடைய கலை வெளிப்பாடு கள்.

இந்த நிகழ்வுகளில் ஒலித்த அந்தவரிகள் ஒவ்வொன்றுமே உயி ருள்ளவை. வெறும் கனவுகளோ, வெறும் கற்பனைகளோ அல்ல. அந்த உயிருள்ள வரிகளுக்கு அந் தக் கலைஞர்கள் மீண்டும், மீண்டும் உயிர் கொடுத்தார்கள். அந்த உயிர் தான் எங்களின் ஆன்மா. அந்த உயிர்தான் எங்கள் தேசியத்தின் தேடல். அந்த உயிர்தான் நாங்கள் அடையப்போகின்ற அந்த இலக்கின் வழிகாட்டி.

ஆகவே, ஒரு மனிதன் தன்னு டைய உணர்வுகளை வெளிப்படுத் துகின்ற ஒரு இடம்தான், ஒருமைப்பாடும் தான் இந்த கலை, இலக்கிய வெளிப்பாடு.

இந்தக் கலை இலக்கிய வெளிப் பாடுகள் காலத்தை வெளிப்படுத்து கின்றது. வரலாறாக பரிணமிக்கின் றது. இந்த வெளிப்பாடுகள் எங்கள் தேசத்தில் எப்படி உருவாகி இருக் கின்றது? எப்படி உருவாக வேண்டிய தேவை இருக்கின்றது? என்பதைப் பற்றி நாங்கள் இங்கு ஆய்வு செய்ய வேண்டிய தேவையும், அதற்கேற்ப எங்களை நாங்கள் வழிப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையும் நிச்சயமாக இருக்கின்றது எனவும் அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

## 22 க்கு முன் நடைபெறும்!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மருதங் கேணி உதவி அரச பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையி லான விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன் நடத்தி முடிப்பது என முடிவு செய் யப்பட்டுள்ளது.

இதற்கான கூட்டம் கடந்த புதனன்று மருதங்கேணி உதவி அரச அதிபர் வியவேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மருதங்கேணி உதவி அரச பிரிவில் பதிவு செய்யப்பட்ட 20 இற்கு மேற்பட்ட கழகங்களின் தலைவர், செயலா ளர்கள் மற்றும் அந்தந்த கிராம அலுவலர்கள் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (11)

## குடிநீர் தட்டுப்பாடு

(முள்ளியவளை)

அளம்பில் தங்கபுரம் கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவிவருகின் றது.

மேற்படி பகுதியில் வசிக்கும் மக்கள் அப்பகுதியில் உள்ள பொதுக் கிணறுகள் புனரமைக்கப் படாது அரைகுறையாகவுள்ள நிலையில் சுமார் 1 கிலோமீற்றர் தூரம் சென்றே குடி நீரினைப் பெற்று வருகின்றனர். (ஆ)

# பிரதேச செயலர் மட்டப் போட்டிகளில் 'பண்டாரவன்னியன்' வெற்றியீட்டியது

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டு சுட்டான் பிரதேச செயலக விளை யாட்டுப் போட்டிகள் கடந்த வெள்ளி யன்று மாலை 3.00 மணியளவில் மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை மைதானத்தில் பிரதேச செயலர் திருமதி.ந. செல்வராசா தலைமை யில் நடைபெற்றது.

இதில் மங்கல விளக்கினை மு/ கற்சிலைமடு அ.த.க.பாடசாலை அதிபர் பொ.அருமைச்சந்திரன், திலீபன் மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் செல்வி வசந்திமாலா ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியினை பிரதேசப் பொறுப்பாளர் லோ.சின்னக்கிளி ஏற்றினார். பிரதேசக் கொடியினை பிரதேச செயலர் திருமதி ந.செல்வ ராசா ஏற்றியதைத் தொடர்ந்து கழகங்களின் கொடியினை கழகத் தலைவர்கள் ஏற்றினர். ஆசியுரை யினை திருமதி ந. செல்வராசா ஆற்றியதைத் தொடர்ந்து கருத்துரை களை முல்லை மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகஸ்தர் எஸ்.துரைசிங்கம் ஆற்றி னார்.



பிரதேச செயலர் ந.செல்வராசா ஆசியுரை வழங்குவதையும் பிரதேச செயலக எழுதுனரும் தட்டெழுத்தாளருமான ரவீந்திரநாதன் பண்டாரவன்னியன் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் (அருகில் பிரதேச விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர் எஸ்.திலீபன்) படங்களில் காண்க.

முதலாம் இடத்தை 233புள்ளிகளைப் பெற்று பண்டாரவன்னி யன்கழக மும், முத்து ஐயன் கட்டு இடது கரை பாரதி விளை யாட்டுக்கழகம் 102 புள்ளி களைப் பெற்று இரண்டாம் இடத் தையும் 57 புள்ளி களை பெற்று உதய சூரியன் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

சிறப்பு நிகழ்ச்சியாக உடற்பயிற்சிக் கண்காட் சியும் நடை பெற்றது.

இதேவேளை, பண்டார வன்னியன் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து மூன்று வருடங்களாக வெற்றிக் கிண்ணத் தைத் தனதாக்கிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வெங்காயச் செய்கையாளர்கள் சந்தைப்படுத்தலின்றி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 300 ஆயிரம் மெற்றிக்தொன் வெங்காயம் சந்தைப்படுத்த முடியாத நிலையில் தேங்கியுள்ள தாகத் தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களைவிட இம்முறை வெங்காயவிளைச்சல் மிகவும் அதிகமாக இருந்தமையினா லேயே வெங்காயம் போதிய சந்தை வாய்ப்பைப் பெறவில்லை என்று விவசாயிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

# பழைய ஊசி பாவனையால் நோயாளர்கள் அவலம்!

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் களுக்கு பழைய ஊசிகளை போடுவதால் நோயாளர்கள் மிக வேதனையை அனுபவித்து வருகின் றனர்.

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலைக்கு வழங்கப்படும் ஊசி மருந்திற்கு ஏற்ப ஊசிகள் கிடைக்காததினால் வளைவுநெழிவு உடைய 100 ஊசிகளை மட்டும் அவித்து அவித்து, மாறி மாறி நோயாளர்களுக்கு 2மாதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பழைய கூர்மழுங்கிய இவ் ஊசியை நோயாளர்களுக்கு பயன் படுத்தும்போது நோயாளர்களினது தசைகள் பிய்ந்து இரத்தக் கசிவும் ஏற்படுவதுடன் பலத்த வேதனையை யும் தாங்கிவருகின்றனர்.

இதனால் சிறு குழந்தைகளுக் கும் இவ் ஊசிகளே பயன்படுத்தப் படுவதால் அக்குழந்தைகள் கடும் வலியால் தவிக்கும் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளது. (ஆ)

# இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் சென்ற ஆண்டு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பொருட்கள் இந்தியா வுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது கடந்த வருடத்தில் 142 சதவீதத் தினால் அதிகரித்ததாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், இலங் கையிலிருந்து ஏற்றுமதியாகும் 2800 பொருட்களுக்கு வரிவிதிப்பு விலக் கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் 03 வருடங் களுக்கு நடைமுறையில் இருக்கும்.

2001 ஆம் ஆண்டில் இந்தியா வுக்கான ஏற்றுமதி 90 மில்லியன் டொலராக இருந்தது.2002 இல் இத்தொகை 160 மில்லியன் ரூபா வாக அதிகரித்திருப்பதாகவும், அதேவேளை 110 மில்லியன் பெறுமதியான பொருட்கள் இறக் குமதி செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

## பயிற்சி நெறி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப்படும் கிராம அபிவிருத்தித் திட்டங்களைக் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக கிராம மக்களை ஆற்றுப்படுத்து வதற்காக சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறி அன்புவழிபுரத்தில் அமைந்துள்ள கமத்தொழில் திணைக்கள பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. குச்சவெளிப்பிரதேச செயலாளர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சியினை சம்பிரதாயபூர்வமாக மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத் தார்.32 பயிற்சியாளர்கள் பயிற்சியில் பங்குபற்றினர்.

# உயர்தர வகுப்புக்களுக்கு கலை, வர்த்தக பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்களில் நில வும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக் கைகளை மாகாணக் கல்வியமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

விரைவில் நியமிக்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமனத்தின் போது இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக கலை, வர்த்தகப் பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கமைவாக கலை, வர்த்தகப் பிரிவுகளில் பாடரீதியாக நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங் களை கல்வியமைச்சு கோரியுள்ள தாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

முன்னுரிமை அடிப்படையில் கலை, வர்த்தகப் பிரிவுகளில் வெற்றிடமுள்ள அனைத்துப் பாடங்க ளும் உள்ளடக்கப்படுவதன் தேவை யான ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் திரட் டப்பட்டு வருகின்றன.

# தென்பகுதியில் பரீட்சை மோசடிகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன

## -உதவிப் பரீட்சை ஆணையாளர் தகவல்

நாடளாவிய ரீதியில் நடாத்தப் படும் பரீட்சைகளில் தென் பகுதியி லேயே கூடுதலான குளறுபடிகளும் குற்றச்சாட்டுக்களும் இடம்பெறு வதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் முஹம் மட் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர்தரப்பரீட்சைக் கடமை களில் ஈடுபடும் இணைப்பாளர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்கள் மற்றும் நிரந்தர நோக்குநர்களுக் கான அறிவுறுத்தல் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோதே மட்டக்களப்பில் இவ்வாறு கூறியுள் ளார்.

பரீட்சைக் கடமைகளில் இனி மேல் பாடசாலை அதிபர்களும் ஆசிரி யர்களுமே ஈடுபடுத்தப்படுவர். திணைக்களத்தில் கடமையாற்று பவர்கள் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் இதற்கான சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## சிந்தனைக்கு



எனது மக்கள் பற்றியும், எனது தேசம் பற்றியும், எனது இயக்கம் பற்றியும் நான் பெருமிதம் கொள்கிறேன்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
தமிழ் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-04-2003

## பிறக்கும் புத்தாண்டில்!

சிங்களவர்களும்– தமிழர்களும் ஒரே நாளில் கொண்டாடும் பண்டிகை சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பாகும். வேறுபட்டு நிற்கும் இரு இனங்களும் ஒன்று சேர்ந்து கொண்டாடாதுவிடினும், ஒரே நாளில் கொண்டாடும் நிகழ்வு என்ற ரீதியில் இது ஒரு தனித்துவமான முக்கியம் பெறும் தினமாகும். இலங்கையில் தமிழ்–சிங்கள மக்களை இணைத்துக் கூறும்– அதாவது தமிழ்–சிங்கள புத்தாண்டு என்றோ சிங்கள–தமிழ் புத்தாண்டு என்றோ கூறப்படும் பண்டிகை நாளாகவுமுள்ளது.

புத்தாண்டுகள் பிறப்பதும்–அவை கழிவதும் அடுத்து மற்றொரு ஆண்டு பிறப்பதும் காலக் கணிப்பீட்டின்பாற்பட்டதாகும். ஆனால், பிறக்கப்போகும் புத்தாண்டு நன்மைபயப்பதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கை மக்களிடம் வேரூன்றிப் போய்விட்ட ஓர் நம்பிக்கையாகும். ஆனால், இதில் வெற்றி கிட்டுகின்றதோ இல்லையோ வருடாவருடம் அந்நம்பிக்கை மீளப் புதிப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இந்நம்பிக்கைகளில் பலரின் வாழ்க்கைச் சக்கரமே சுழல்கின்றதெனலாம்.

கடந்த புத்தாண்டு ஆரம்பித்த போது தமிழ் மக்கள் மத்தியிலும் சரி, சிங்கள மக்கள் மத்தியிலும் சரி, சமாதானம் குறித்த பெரியளவிலான நம்பிக்கைகள் துளிர்விட்டிருந்தன. அதாவது சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்த யுத்தமானது முடிவுக்கு வந்துள்ளது. இதனை அடுத்து இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்று விரைவில் ஏற்படும் என்பதே அதுவாகும்.

ஆனால், அவ் ஆண்டு நேற்றுடன் கழிந்து விட்டது. மக்களின் எதிர்பார்க்கையானது நிறைவேறவில்லை. ஆயினும் சிறிதளவு முன்னேற்றம் கண்டுள்ளமை நிராகரிக்க முடியாததே. ஆயினும் கடந்த ஆண்டில் சமாதானம் குறித்து மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை இன்று கொண்டுள்ளார்களா என்றால், இல்லை என்றே கூறுதல் முடியும்.

ஆனால், இத்தனைக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும்–விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இதுவரையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. பல தீர்மானங்கள், பல இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், இவற்றில் எத்தனை உடன்பாடுகள் அமுலாக்கம் பெறத்தக்கவை என்பதே மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்விக்குக் காரணமாகும்.

இவ்வாறு மக்கள் மத்தியில் கேள்வி எழுவது ஒன்றும் தவறானதும் அல்ல. ஏனெனில்,புரிந்துணர்வு உடன்பாட்டின் சரத்துக்கள் பல உட்பட, பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை அமுலாக்குவதில் அரசாங்கத்தின் போக்கு திருப்தி கரமானதாக இல்லை. இதன் விளைவானது அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தையில் முனைப்புக் காட்டுவதானது அது எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையே என்ற கருத்தும் வலுப்பட்டுவருகின்றது. இதனை நிரூபிப்பது போன்று அண்மைக் காலத்தைய சிறிலங்கா அரசின் நடவடிக்கை களும் உள்ளன.

இதேவேளை சமாதான முயற்சிகள் மீதான அவநம்பிக்கையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளும் வெளிப்படுத்துவதாய் உள்ளன். சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் பூரண ஆதரவு வழங்கிவருவதாக அவர் கூறிவருகின்ற போதும், ஐ.தே.முன்னணி அரசாங்கத்தை அவர் கடுமையாகச் சாடி வருவதோடு, சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிப்பவராகவுமே உள்ளார். குறிப்பாக ஆயுதப்படையினருக்கு அவர் விடுக்கும் பணிப்புக்கள் சமாதான முயற்சிகளைப் பாதிப்பதாகவே உள்ளன.

இந்நிலையில் தான் கடந்த புத்தாண்டின் தொடக்கத்தில் சமாதானத்தின் மீது இருந்த நம்பிக்கை மக்கள் மத்தியில் தளர்வடையத் தொடங்கியுள்ளது எனலாம்.அரசாங்கத் தரப்பு "ஆறு கடக்கும் வரையில் அண்ணன் தம்பி" என்பது போன்று சர்வதேச கடன் உதவியைப் பெறும் வகையில் நடந்து கொள்கின்றதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆகையினால், சமாதானம் குறித்து புதுவருடத்தின் மீது மக்களின் நம்பிக்கை கடந்த ஆண்டைப் போன்றதாக இல்லை. சமாதானத்தின் மீதான நம்பிக்கை உடைவுற்ற நிலையிலேயே உள்ளது. ஆயினும் மக்கள் மனங்களில் வேரூன்றிப்போய்விட்ட நம்பிக்கை காரணமாக அவர்கள் மனங்களில் சிறிதளவேனும் நம்பிக்கை இல்லாமலும் இல்லை. ஆனால், இந்நம்பிக்கை நிலைபெறுமா? அன்றி கானல் நீர் போன்று கலைந்து போகுமா? என்பது அரசாங் கத்தின் நேர்மையான நடவடிக்கைகளைப் பொறுத்ததே. அரசாங்கம் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்தால், மக்களின் நம்பிக்கைகளும் வெற்றிபெறும்.

# சுயலாபம் கருதி செயற்படுதலே எமது சமூகத்தில் காணப்படுகிறது

### –சிறிலங்கா சனாதிபதியின் தெளிவான பார்வை

(கொழும்பு)

தேசிய நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதை விடுத்து சுயலாபம் கருதிச் செயற்படும் நிலையே தற்போதைய சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்றது என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சாரணர்களுக்கான நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறான ஒரு நிலையில் இருந்து சமூகத்தை மீட்டெடுக்கும் பொறுப்பு இளைய சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சகோதரத்துவம் நட்புணர்வு என்பவற்றுக்குப் பதிலாக வன்முறையும் சுயநலனுமே இன்று சமூகத்தில் காணப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இராமேஸ்வரத்துக்கு பாலம் அமைத்தால் 22 நாடுகளுடன் தரைவழி தொடர்பு

### -அமைச்சர் கரு ஜெயசூரிய

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பாலம் அமைப்பதன் மூலம் 22 நாடுகளுடன் தரைமார்க்கத் தொடர்பை ஏற்படுத்த முடியும் என்று அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலத்தை நிர்மாணிப்பதற்கு பல்வேறு நிறுவனங்கள் உதவ முன்வந்துள்ளன.

இந்தியாவில் உள்ள இராமேஸ்வரத்துக்கும் மன்னாருக்கும் இடையிலான இந்தப் பாலம் 29 கிலோ மீற்றர் நீளமானது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போது இந்தப் பாலம் அமைப்பது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தார்.

அடுத்த சிலவருடங்களுக்குள் நாட்டை விரிவான அளவில் அபிவிருத்தி செய்வது தான் தற்போதைய அரசின் நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மலேசிய நிதியுதவியில் அரச ஊழியர்களுக்கு வீடுகள்

(கொழும்பு)

மலேசியாவின் நிதியுதவியுடன் அரசாங்க ஊழியர்களுக்கு 30 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.இதற்கான சுற்று நிருபம் சகல அரசாங்கத் திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக 2000 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும்,கூறப்படுகின்றது.

மலேசியாவின் விக்கொன்ஸ் ரக்ஷன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

## முதியோர் கணக்கெடுப்பு

(கொழும்பு)

நாட்டின் முதியோர்களைக் கருத்தில் கொண்டு அவர்களின் நலன் பேணக்கூடிய கொள்கைகளை வகுப்பதற்காக முதியோர்கள் குறித்தான கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

60 வயதிற்கு மேலான முதியவர்களின் எண்ணிக்கை நாட்டின் சனத்தொகையில் 9.9 வீதமாக உள்ளது. வருடாந்தம் இது 1.2 வீதமாக அதிகரித்து வருவதால் முதியவர்களுக்குத் தேவையான கொள்கைகளை வகுப்பது அவசியமென சமூக நலன்புரி அமைச்சின் செயலாளர் விஜயலட்சுமி ஜெகராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

# சார்க் விளையாட்டுப் போட்டி பாகிஸ்தானிலேயே நடைபெறும்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் திட்டமிட்டபடி பாகிஸ்தானில் நடைபெறும். இத்தகவலை சிறிலங்கா தேசிய ஒலிம்பிக் குழுத் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

அடிக்கடி ஒத்திவைக்கப்பட்டு இந்தப் போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் செப்டம்பர்-ஒக்டோபர் மாதங்களில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இது இவ்வாறிருக்க இப்போட்டிகள் சிறிலங்காவில் நடைபெறவிருப்பதாகச் செய்திகள் வெளியான நிலையில் இதனை தேசிய ஒலிம்பிக்குழுத் தலைவர் மறுத்துள்ளார்.

## விரைவில் இணைவில்லை

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீரர்களான லியாண்டர் பயஹும் மகேஸ்பூபதியும் இணைந்து விளையாடவுள்ளனர் என்ற கூற்றை மகேஸ பூபதி மறுத்துள்ளார்.

இருவரும் இந்தியாவிற்கு இரட்டையர் டென்னிஸ் போட்டிகளில் பல சாம்பியன் கிண்ணங்களைப் பெற்றுக்கொடுத்தவர்கள்.

இவர்கள் கடந்த வருடம் இரண்டாவது தடவையாகப் பிரிந்தனர். இந்தியாவின் சார்பில்விளையாடும் டேவிஸ் கிண்ணம் போன்ற போட்டிகளில் மாத்திரம் விளையாடி வருகின்றனர். இந்நிலையில் ஏனைய போட்டிகளிலும் இவர்கள் இணைந்து விளையாடுவதாகச் செய்திகள் வெளியாகிய நிலையிலேயே பூபதி அதனை மறுத்துள் ளார்.

# உலகக்கிண்ணக் கிரிக்கெட் —129 பேர் கைது—

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் போது இந்தியாவில் மும்பை,கொல்கத்தா,டெல்லியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக 129 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 12 இலட்சம் ரூபா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக 42 வழக்குகளும் பதிவாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது

# ஓய்வு பெறவில்லை என்கிறார் ஹூப்பர்

சர்வதேச போட்டிகளில் இருந்து நான ஓய்வுபெறவில்லை. விரைவில் மேற்கிந்திய அணிக்குத் திரும்புவேன். இவ்வாறு மேற்கிந்திய அணியின் முன்னாள் தலைவர் கார்ல் ஹூப்பர் தெரிவித்துள்ளார்.

அணித்தலைவர் பதவியில் இருந்து விலக்கப்பட்டபின் அவர் தொடர்ந்தும் விளையாட சம்மதித்தார் எனினும் பின்னர் திடீரென மனம்மாறி அவுஸ்திரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இருந்து விலகினார்.

இந்நிலையில் இங்கிலாந்து பிராந்தியப் போட்டிகளில் பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தால் விளையாடுவது குறித்து பரிசீலிப்பதாகவும், ஆனால் நீண்டகாலம் நான் மேற்கிந்தியத்தீவு அணியில் இருந்து ஒதுங்கியிருக்கமாட்டேன். இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்க சுற்றுலாவில் பங்குபற்றுவதற்கு முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார். இது இவ்வாறிருக்க தனிப்பட்ட காரணங்களாலேயே அணியில் இருந்து விலகினேன் என்றும் ஹூப்பர் தெரிவித்துள்ளார்.

# தலைமைப் பதவியை ஏற்கத் தயார்



தலைமைப் பதவியை நான் எதிர்பார்க்கவில்லை.எனினும் வேறு யாரும தலைமைப் பதவியை ஏற்கவராத பட்சத்தில் என்னைக் கேட்டுக்கொண்டால் சம்மதம் தெரிவிப்பேன் என்று சிறிலங்கா கிறிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பைப் போட்டியின் தோல்வியைத் தொடர்ந்து அப்போதே இராஜினாமா செய்வதாக சனத்ஜெயசூரிய அறிவித்தார்.

எனினும் ஷார்ஜா போட்டி வரை தலைமை பதவியில் நீடிக்குமாறு சிறிலங்கா விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கேட்டுக் கொண்டதையடுத்து, அப்பதவியில் இருக்க ஜெயசூரிய சம்மதித்தார். ஷார்ஜா போட்டியில் இறுதிக்குக் கூட தகுதிபெறாததைத் தொடர்ந்து இராஜினாமா செய்வதாக ஜெயசூரிய மீண்டும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜெயசூரிய தலைமையில் 38 டெஸ்ட்களில் 18 இலும் 116 ஒரு தின ஆட்டங்களில் 66 இலும் சிறிலங்கா அணிவென்றுள்ளது.

# அடுத்த பொதுத்தேர்தலில் தி.மு.க.வுடனேயே கூட்டணி

## - பா. ஜ. க. பொதுச் செயலாளர்

வருகிற பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் தான் கூட்டணி அமைப்போம் என பாரதீய ஜனதா பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் கூறியுள்ளார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் டில்லி, மத்திய பிரதேசம் ராஜஸ்தான், சத்தீக்கர் ஆகிய மாநிலங்களில் பாரதீய ஜனதாக் கட்சி கண்டிப்பாக வெற்றி பெறும். இந்த மாநிலங்களில் சமீபத்தில் நடந்த சட்டசபை இடைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. பெரும்பாலான மாநிலங்களில் எங்களுக்கும், காங்கிரஷ் கட்சிகளுக்கும் நேரடிப் போட்டி நடைபெறும். அது போலவே வரும் தேர்தல்களிலும் கூட்டணிக் கட்சியுடன் சேர்ந்து தான் போட்டி யிடுவோம்.

அ.தி.மு.க எங்களுடன் நெருங்கிவர விரும்புகிறது. பொடோ உட்பட சில முக்கிய விடயங்களில் ஜெயலலிதாவின் முடிவு எதிர்க் கட்சித் தொண்டர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது அவரது தந்திரமாகவும் இருக்கலாம். ஆனால் இதற்காக அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைப்போம் என்று அர்த்தம் இல்லை. இது தொடர்பாக அவர்களுடன் எந்தவித பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை. அ.தி.மு.கவுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை. தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இருந்து இதுவரை நாங்களாக யாரையும் வெளியேற்றவில்லை. திரிணாமுல் காங்கிரசும், அ.தி.மு.கவும் அவர்களாகவே வெளியேறினார்கள். தற்போது திரிணாமுல் காங்கிரஸ் மீண்டும் கூட்டணியில் சேர்ந்துள்ளது. இவ்வாறு பிரமோத் மகாஜன் கூறியுள்ளார்.

# மாகாண மட்டப் போட்டிக்கு இராமநாதபுரம் அணிகள் தேர்வு

வட்டக்கச்சிப் பகுதியிலிருந்து இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைப் பெண்கள் அணியும் இராமநாதபுரம் மகாவித்தியாலய பெண்கள் அணியும் மாகாண மட்ட உடற் பயிற்சிப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தெரிவாகியுள்ளன.

கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் முறையே முதலாம் இடத்தை இராமநாதபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும், இரண்டாம் இடத்தை இராமநாதபுரம் மகா வித்தியாலயமும் பெற்று மாகாண மட்டத்தில் "மே" மாதம் நடைபெறவிருக்கும் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளன. சென்ற வருடம் இராமநாதபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (12)

# வடகிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் மேலும் பிற்போடத் திட்டம்

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களை திட்டமிட்டவாறு யூன் மாதம் நடத்தாது யூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஒத்தி வைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலை யூன் 25 ஆம் திகதி நடத்த முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும் கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்பு மனுக்களைக் கோர வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

அத்தோடு இதற்கான சட்டத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய தேவை இருப்பதால் யூன் மாதமே அந்த சட்ட திருத்தத்தை சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்குக் கால அவகாசம் வேண்டும் என்பதினாலேயே தேர்தலை ஒத்தி வைக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் கூறுகின்றன.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான செயற்பாடுகளில் எழுபது வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதாகப் பிரதித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வன் தெரிவித்துள்ளார்.

# டாக்கா முக்கோணப் போட்டியில் தென். ஆபி. அணி படுதோல்வி

டாக்காவில் நடைபெற்று வரும் மும்முனை கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணியை எதிர்த்தாடிய இந்தியா 153 ஓட்டங்களால் தோற்கடித்து அபார வெற்றிபெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் கங்குலி 75 ஓட்டங்களையும், முகமட் கைப் மொங்கியா இருவரும் முறையே 95,55 ஓட்டங்களை ஆட்டம் இழக்காதும் பெற்றனர்.

பதிலுக்கு 308 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடின இலக்குடன் களம் புகுந்த தென்னாபிரிக்கா இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு முகம்கொடுக்க முடியாது 154 ஓட்டங்களை மட்டும் பெற்று அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்தது.

# 22நிலையங்களில் பரீட்சை

முல்லைத்தீவு மாவட்டத் திற்குஉட்பட்டமுல்லைக் கல்வி வலயத்திலும் துணுக்காய் கல்வி வலயத்திலுமாக க.பொ.த. உயர்தரப்பரீட்சை 07.இணைப்பு நிலையத்திலும் நடைபெறும் எனத்தெரிய வருகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி இப்பரீட்சை ஆரம்பமாகவுள்ளமை தெரிந்ததே. (26)

## பயிர்செய்வோர் கவனத்திற்கு

முத்து ஐயன்கட்டு குளத்திட்டத்தின் கீழ் பயிர்செய்யும் விவசாயிகள் இம்முறை குளத்தில் நீர் பற்றாக்குறையினாலும் வறட்சி நிலவுவதாலும் 2003ஆம் ஆண்டு சிறுபோகப் பயிர்செய்கைக் கூட்டத்தின் தீர்மானத்தின்படி நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி 30.04.2003 ற்கு முன்னர்பயிர்செய்கை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறும் நீர்ப்பாசன முகாமைத்துவத்திற்குஅமைவாகநீரினைப் பயன்படுத்துமாறும் பெருநோக்கிய செய்தி குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது. (05)

## பெறுபேற்று சான்றிதழ்

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுடைய பெறுபேற்று அட்டவணைகளுடன் அவர்களுக்குரிய பெறுபேற்றுச் சான்றிதழ்களும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றிய பரீட்சாத்திகளுக்கே பெறுபேற்றுச் சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### க.பொ.த...

நொச்சி மாவட்டத்தில் உள்ள முரசுமோட்டை முருகானந்தா மாகா வித்தியாலயம் மற்றும் வேறு சில பாடசாலைகளுக்கும் வந்து சேரவில்லை என தெரியவந்துள்ளது.

(சோ.வே)

### 500...

வரப்படுவார்கள் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு நலன்புரி அமைச்சர் லக்ஸ்மன் அபயயாப்பா அபேவர்த்தன் தெரிவித்துள்ளார்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!





HERO HONDA World No. 1 Two-Wheeler Company



RG இரத்தின கோபால்ஸ்
63, 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7927)

# மலசல கூடக்குழியிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு புதுநகரில் மலசல கூடக் குழி ஒன்றில் மூன்று மாதம் மதிக்கத்தக்க சிசு ஒன்றின் சடலம் கடந்த ஞாயிறன்று பொது மக்களால்


சிசுவின் சடலம்

கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய விசாரணையைப் பொலிசார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## -புகையிரதம் தடம் புரண்டதால்-

# கொழும்பு- மட்டக்களப்பு ரயில் சேவை இடைநிறுத்தம்!

கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும்இடையில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட ரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.ரயிலின் இரண்டு பெட்டிகள் மட்டக்களப்புக்கும் கிராய்மடு எனும் இடத்தில் பாதையை விட்டு விலகியதை அடுத்து இந்த தற்காலிக தடைதோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இதன் திருத்தவேலைகள் முடிய ஒரு வாரம் தேவைப்படும் எனவும் இதனால் இம்மாத இறுதியிலேயே மீண்டும் ரயில் சேவை ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு

## அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ

நாட்டில் சமாதானத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் சர்வதேச சமூகம் பூரண ஆதரவு தெரிவித்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

சமாதான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் பொ. ஐ. முன்னணியின் சில பிரிவுகள் மற்றும் ஜே.வி.பி. போன்ற தரப்பினர்களுக்கு இது ஓர் பாடமாக விருக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், வாஷிங்டனில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் டோக்கியோ கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

### வட-கிழக்கு...

தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணம் குறித்த கருத்துக்கள், சிபார்சுகளை கொள்கைத் திட்டமிடல் அமைச்சுக்கு வரும் மே மாதம் 6ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாக். ராணுவ..

அதிகாரிகளும் இடம் பெற்றுள்ளனர். பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடனான சந்திப்பின்போது இரு தரப்பு இராணுவ விவகாரங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

### பலமான...

சியடைந்தது. தலைவர் இளம் வயதில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார். அப் போராட்டம் வளமான சக்திகளை எதிர்கொள்வதற்காக கெரில்லா போராக ஆரம்பிக்கப்பட்டு இன்று உயர்ந்த இந்நிலையை அடைய வைத்துள்ளார்.

இங்கு நடைபெறும் இவ் மானுட விழா உலகிற்கு பல செய்திகளைச் சொல்லும். அது தமிழரது வீரத்தை சுதந்திரத்தை என பல செய்திகளைச் சொல்லும். தமிழன் எப்போதும் ஒன்று பட்டு நிற்பதன் மூலம் எந்த சவால் களையும் எதிர்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

### சதாமின்...

சிரியாவை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

கடந்த 2 நாட்களில் இரண்டாவது தடவையாக அமெரிக்கா இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

யுத்தம் தொடங்கிய பின் சதாம் ஆதரவாளர்கள் சிரியாவிற்கு ஓடி ஒழிந்திருக்கலாம் என்று அமெரிக்கா நம்புவதே இதற்குக் காரணம்.

இது குறித்து கொலின்பவல் தெரிவிக்கும் போது சதாம் ஹுசைன் ஆதரவாளர்களுக்கு சிரியா பாதுகாப்பு புகலிடம் வழங்கக்கூடாது. அவர்களைப் பிடித்து தடுத்து வைத்து நாட்டுப் படைகளிடம் ஒப்படைப்பதற்கு தயாராக வேண்டும். அவர்கள் மீது முறையான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு அவர்கள் நீதி விசாரணைக்கு உட்படுத் தப்படுவார்கள். சிரியா இவர்களுக்கு புகலிடம் தஞ்சமோ பாதுகாப்போ வழங்குமோர் இடமாக புலப்படக்கூடாது என்றார்.

இதனிடையே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது சிரியா சதாமுக்கு ஆயுதம் வழங்கியதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திறப்பு விழா
சாணக்கியன் காகிதாதிகள் வாணிபம்
ஈழநாதம் பணிமனைக்கு அருகாமையில்
உங்களின் தேவையுணர்ந்து சேவை வழங்க
புதுவருடத்தில் சாணக்கியன் வருகிறான்.
யாழ்சாலை
-கிளிநொச்சி

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.